# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,927—1970 ඔක්තෝබර් 9 වැනි සිකුරාදා—1970.10.9

14,927 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யப்படுவதாகத் தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. | |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 547 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 548 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 553 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 549 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 331

எண். டி. 320/ஆர்ஈசிரி

**தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர், தரைப்படைச் சேவைக்கு வைத்தியத் தகுதியின்மை காரணமாக 1970, ஒற்றோபர் 15 ஆம் திகதியிலிருந்து தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுகிறார் :—

மேஜர் இயூஸ்ரஸ் டேவிட் பொன்சேக்கா, சி.ஏ.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, ஒற்றோபர் 2.

10-364

1970 இன் இல. 332

எண். டி./விஎவ்/17/ஏ(vi)

**தரைப்படை—சி. வி. எவ்—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக சேவை மாற்றம்**

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலரை 1970, ஒற்றோபர் 1 ஆம் திகதியிலிருந்து ஒன்பது மாத காலவெல்லை ஒன்றுக்கு தரைப்படையின் தொண்டர் படையிலிருந்து நிரந்தரப்படையிலான தற்காலிக சேவை மாற்றம் பெறுதலை அங்கீகரித்தலில் அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் களிப்படைந்துள்ளார்.

கப்ரின் அசோக்க முதலியக்க, சி. சி. சி.

அதி உத்தமரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்ஹ,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 21.

10-251

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

1970 இன் இல. 333

என். டி./விளவ்/2/ஏ (IV)

**தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்**

கப்ரின் (குவாட்டர் மாஸ்ரர்) எட்வேர்ட் டொன் ஜயசிங்ஹ, சி. எல். ஐ., 1970, செத்தெம்பர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து தரைப்படையின் தொண்டர் படையிலிருந்து இளைப்பாறினர்.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்ஹ,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 21.

10-254

1970 இன் இல. 334

என். டி./விளவ்/38 (III)

**தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அமர்வும் சேவைக்கு நியமித்தலும்**

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பெருமகனை 1970 ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் தரைப்படையின் தொண்டர் படையில் இரண்டாவது லெவ்ரினன்ற் பதவியில் அரசாணை அமர்வு செய்யப்பட்டு 2 வது (தொண்டர்) பட்டாளம், இலங்கை காலாட் படையில் சேவைக்கு நியமித்தலை அங்கீகரிப்பதில் அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார்கள்.

திரு. காமனி டயஸ் குணவர்த்தன.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1970, செத்தெம்பர் 24.

10-253

## நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 335

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எல். சமரதுங்க .. | பதில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 செப்ரெம்பர் 20 லிருந்து 22 வரை | நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் இல்லாத காலங்கள் |
| திரு. டி. பியு. எம். சிறிமானே .. | மாவட்ட நீதிபதி முதலியன, கண்டி .. | 1970 செப்ரெம்பர் 23 லிருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. சி. வி. உடலகம .. | மாவட்ட நீதிபதி, கொழும்பு .. .. | ஷை .. | ஷை |
| திரு. ஈ. எவ். டீ சில்வா .. | பதில் மாவட்ட நீதிபதி முதலியன, கண்டி .. | ஷை .. | ஷை |
| திரு. எல். எச். டீ அல்விஸ் .. | மேலதிகமாவட்ட நீதிபதி முதலியன, பலப்பிட்டி. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 செப்ரெம்பர் 19 லிருந்து | பலப்பிட்டி மாவட்ட நீதிமன்ற என்ஜி. 1761 இலக்கவழக்கில் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. சி. வி. உடலகம .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கண்டி. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 செப்ரெம்பர் 30 லிருந்து | கண்டி மாவட்ட நீதிமன்ற 6974/எல் இலக்க வழக்கில் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஆர். குலதுங்க .. | மேலதிக நீதவான் முதலியன, மாத்தறை .. | 1970 செப்ரெம்பர் 17 லிருந்து 23 வரை | திரு. ஆர். இளயபெருமா இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். எம். அபுர்தாகிர் .. | மேலதிகமாவட்ட நீதிபதி முதலியன, புத்தளம் .. | 1970 செப்ரெம்பர் 21 லிருந்து 23 வரை | திரு. கே. பாலசிட்ணர் இல்லாத காலங்கள் |
| திரு. எல். டபிள்யு. பெர்னன்டோ .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி கம்பளை முதலிய இடங்களில் | 1970 செப்ரெம்பர் 21, 23, 26, 27 | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஈ. கதிர்காமலிங்கம் .. | மேலதிகமாவட்ட நீதிபதி முதலியன, யாழ்ப்பாணம் | 1970 செப்ரெம்பர் 30 | திரு. ஐ. எம். இஸ்மாயில் இல்லாத காலம் |
| திரு. எல். டபிள்யு. பெர்னன்டோ .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி கம்பளை முதலிய இடங்களில் | 1970 ஒக்டோபர் 3 | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலம் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | மேலதிக நீதவான் முதலியன, சிலாபம்–புத்தளம் | 1970 செப்ரெம்பர் 13 லிருந்து 16 வரை | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. சி. தியாகருஜா .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி மாத்தளை முதலிய இடங்களில் | 1970 செப்ரெம்பர் 25 லிருந்து ஒக்டோபர் 1 வரை | திரு. எஸ். செல்லையா இல்லாத காலங்கள் |
| திரு. எம். எல். என். விக்ரமசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, காலி .. | 1970 செப்ரெம்பர் 23 லிருந்து 25, 27 | திரு. ஜே. சேனாதிருஜா இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். ஆர். பி. ஏ. குணதிலக்க | மேலதிக நீதவான் முதலியன, களுத்துறை .. | 1970 செப்ரெம்பர் 27 | திரு. டபிள்யு. ஜி. என். வீரட்ண இல்லாத காலம் |
| திரு. எம். எச். கரீம் .. | கொழும்பு மேலதிக நீதவான் முதலியன, நாரஎன்பிட்டியில் | 1970 செப்ரெம்பர் 17 | திரு. ஏ. சைமன் சில்வா இல்லாத காலம் |
| திரு. பி. வி. சேனுதிருஜா .. | மேலதிக நீதவான் முதலியன, வவுனியா .. | 1970 செப்ரெம்பர் 25 லிருந்து 30 வரை | திரு. ஏ. எம். ஐ. சாஹேட் இல்லாத காலங்கள் |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. கே. ஜே. ஜஸ்ரின் பெரேரா .. | யற்றிக்கின்ட—வியளுவ முதலியவற்றின் ஊர்நீதி மன்றத் தலைவர் | 1970 செப்ரெம்பர் 1 லிருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. ஜி. எச். ஜி. எவ். என். டீ சில்வா | பெந்தோட்டை—வளள்ளாவிதிக் கோரளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றத் தலைவர் | 1970 ஜூலை 23 லிருந்து | ஷை |
| திரு. ஐ. எம். வியனகே .. | தென்மாகாண ஊர் நீதிமன்றங்களின் மேலதிக தலைவர் | 1970 செப்ரெம்பர் 1 லிருந்து | ஷை |
| திரு. ஜி. எச். ஜி. எல். ஏ. டீ சில்வா | இலங்கை ஊர் நீதிமன்றங்களின் தலைவர்களில் ஒருவர், வெல்லெச—பிந்தென்ன முதலியவற்றின் ஊர்நீதிமன்றத் தலைவர் தகுதிகாண் நிலை மூன்று வருடங்கள் | ஷை .. | ஷை |
| செல்வி எம். எஸ். கதுருகமுவ .. | இலங்கை ஊர்நீதிமன்றங்களின் தலைவர்களில் ஒருவர், ஊவா மாகாணம்—நுவரேலியப் பகுதி ஊர் நீதிமன்றங்கள் மேலதிக தலைவர் | 1970 செப்ரெம்பர் 1 லிருந்து | ஷை |
| திரு. எச். பி. ரட்ணுயக்க .. | வெல்லச—பிந்தென்ன முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஓகஸ்ட் 27 | திரு. ஐ. எம். வியனகே இல்லாத காலம் |
| திரு. சி. இராசையா .. | தீவுகள் முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 23 லிருந்து 25, 27, 28 | திரு. ஐ. கிருபாகரன் இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. டபிள்யு. ஏ. எமானுஎல் .. | கல்கமுவ காரியாதிகாரிப் பிரிவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 30, ஒக்டோபர் 1 | திரு. எம். எம். பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. எச். எம். குணசேகர .. | கிழக்குகிருவப்பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஓகஸ்ட் 19 | திருமதி பி. எஸ். இராமச்சந்திர இல்லாத காலம் |
| செல்வி ஐ. எம். எஸ். கொடகும்புர | குருவிதிக் கோரளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 18 | திரு. ஏ. எல். எம். பெர்ஞன்டோ இல்லாத காலம் |
| திரு. ஏ. எம். சாபி .. | காதி, அவிசாவளை நீதிபரிபாலன மாவட்டம் .. | 1970 ஒக்டோபர் 5 லிருந்து மூன்று வருட காலத்திற்கு | அல்லது மறு அறிவித்தல் வரை |

சிறிமேவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573, கொழும்பு 12,
1970 ம் ஆு செப்ரெம்பர் மீ 30 ந வ.

10–348.

# அரசாங்க அறிவித்தல்கள்

கட்டளை இல : 10

**1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்**

**57 ம் பிரிவின் கீழ் கட்டளை**

1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 57 ம் பிரிவினுல் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர், மைத்திரிபால சேனுநாயக்கா ஆகிய நான், கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இலங்கை மின்சாரச் சபைக்குத் தேவைப்படுவதால், உத்தேசிக்கப்பட்டுள்ள காணியை எடுத்தலை இந்தக்கட்டளையால் அங்கீகரிக்கிறேன்.

மை. சேனுநாயக்கா,
நீர்ப்பாசன, மின்சக்தி,
பெருந்தெருக்கள் அமைச்சர்.

கு. இல. பீ. ஈ. 13/70—எச்.டீ/எல். ஏ./8.
கொழும்பு—1.
திகதி : 18.9.1970.

அட்டவணை

இலங்கைத்தீவின் தென் மாகாணத்திலுள்ள காலி மாவட்டத்தில் வெல்பொடபற்று காரியாதிகாரியின் பிரிவிலுள்ள அம்பலாங்கொடையில் அமைந்திருக்கும் போகஹவத்தை எனக்கூறப்படும் காணியின் மூன்று பகுதியான 1 ஏ. 1 று. 20 பேர். விஸ்தீரணமும், பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டதுமான காணித்துண்டுகள்.

1. வடக்கு : வழிப்பாதை ;
   கிழக்கு : அம்பலாங்கொடை—எல்பிட்டியா வீதி ,
   தெற்கு : வண்டில் போகக்கூடிய பாதை.
   மேற்கு : நீர்வழி.
   உரிமை கோருபவர் : திரு. கே. சார்ல்ஸ் டீ சொய்சா, போகாஹவத்தை, அம்பலாங்கொடை.
2. வடக்கு : வண்டில் போகக்கூடிய பாதை ;
   கிழக்கு : அம்பலாங்கொடை—எல்பிட்டியா வீதி ;
   தெற்கு : அதே காணியின் மீதிப்பாகம் ;
   மேற்கு : நீர்வழி.
   உரிமை கோருபவர் : ஆர். எஸ். டீ. சில்வா, சேர்மன் டீ சில்வா அன் கம்பனி லிமிடட், கொழும்பு—10.
3. வடக்கு : அதே காணியின் மீதிப்பாகம் ;
   கிழக்கு : அரசாங்கக் காணி (புகையிரதப்பகுதி) ;
   தெற்கு : வழிப்பாதை ;
   மேற்கு : அம்பலாங்கொடை—எல்பிட்டியா வீதி.
   உரிமை கோருபவர் : ஆர். ஈ. டீ. சில்வா, கந்தகொடை, அம்பலாங்கொடை.

10-341/1

---

கட்டளை இல : 9

**1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்**

**57 ம் பிரிவின் கீழ் கட்டளை**

1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 57 ம் பிரிவினுல் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர்ப்பாசன மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர், மைத்திரிபால சேனுநாயக்கா ஆகிய நான், கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இலங்கை மின்சாரச் சபைக்குத் தேவைப்படுவதால், உத்தேசிக்கப்பட்டுள்ள காணியை எடுத்தலை இந்தக்கட்டளையால் அங்கீகரிக்கிறேன்.

மை. சேனுநாயக்கா,
நீர்ப்பாசன, மின்சக்தி,
பெருந்தெருக்கள் அமைச்சர்.

கு. இல : பீ. ஈ. 13/70—எச்.டீ/எல். ஏ./8.
கொழும்பு—1,
திகதி : 18.9.1970.

அட்டவணை

இலங்கைத்தீவின் மத்திய மாகாணத்திலுள்ள கண்டி மாவட்டத்தில் அம்பகமுவை கோறளை பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியிலுள்ள போகவந்தலாவையில் அமைந்திருக்கும் சப்பல்டன் தோட்டம் எனக்கூறப்படும் காணியின் ஒரு பகுதியான 1 ஏ., 1 று., 0 பேர். விஸ்தீரணமும், பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டதுமான காணித்துண்டு.

வடக்கு : இராசாதோட்டம்—கொட்டியாகலை பகிரங்க வீதி ;
கிழக்கு : நீர் வழி ;
தெற்கு : அதேகாணியின் மீதிப்பாகம் ;
மேற்கு : ரோமன் கத்தோலிக்க ஆலய வளவு.
உரிமை கோருபவர் : ஸ்டாண்டர்ட் தேயிலை கம்பெனி லிமிட்டட், இலங்கை, கொட்டியாகலை குரூப், போகவந்தாலவை.

10-341/2

---

கட்டளை இல. : 8

**1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்**

**57 ம் பிரிவின் கீழ் கட்டளை**

1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 57 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர்ப்பாசன மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர், மைத்திரிபால சேனநாயக்கா ஆகிய நான், கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இலங்கை மின்சாரச் சபைக்குத் தேவைப்படுவதால், உத்தேசிக்கப்பட்டுள்ள காணியை எடுத்தலை இந்தக்கட்டளையால் அங்கீகரிக்கிறேன்.

மை. சேனநாயக்கா,
நீர்ப்பாசன, மின்சக்தி,
பெருந்தெருக்கள் அமைச்சர்

கு. இல : பீ. இ. 13/70 எச்.டி./எல். எ./8.
கொழும்பு-1,
திகதி : 18.9.1970.

அட்டவணை

இலங்கைத்தீவின் மேற்கு மாகாணத்திலுள்ள கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் அளுத்கடை மேற்கு வட்டாரத்திலுள்ள ஹல்ஸ்டோர்ப் வீதியில் அமைந்திருக்கும் மதிப்பீட்டு இல. 222 ஐ உடைய காணியின் ஒரு பகுதியான 0 ஏ. 0 று. 1.5 பேர். விஸ்தீரணமும், பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டதுமான காணித்துண்டு.

வடக்கு : அதே காணியின் மீதிப்பாகம் ;
கிழக்கு : ஹல்ஸ்டோர்ப் வீதி ;
தெற்கு : 234 ம் இலக்க காணி, ஹல்ஸ்டோர்ப் வீதி.
மேற்கு : அதே காணியின் மீதிப்பாகம்.
உரிமை கோருபவர் : அதி. வணக்கத்திற்குரிய யே. ஏ. ஆர். நவரத்தினம், சகல அர்ச்சிஸ்டர் தேவாலயம், 222, ஹல்ஸ்டோர்ப் வீதி, கொழும்பு—12.

10-341/3

---

கட்டளை இல. 7.

**1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்**

**57 ம் பிரிவின் கீழ் கட்டளை**

1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 57 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர்ப்பாசன மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா ஆகிய நான், கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இலங்கை மின்சாரச் சபைக்குத் தேவைப்படுவதால், உத்தேசிக்கப்பட்டுள்ள காணியை எடுத்தலை இந்தக்கட்டளையால் அங்கீகரிக்கிறேன்.

மை. சேனநாயக்கா,
நீர்ப்பாசன, மின்சக்தி,
பெருந்தெருக்கள் அமைச்சர்.

கு. இல. : பீ. இ. 13/70. எச். டீ/எல். எ./8
கொழும்பு-1,
திகதி : 18.9.1970.

அட்டவணை

இலங்கைத்தீவின் மேற்கு மாகாணத்திலுள்ள கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் திம்பிரிகஸ்யாய வட்டாரத்திலுள்ள ஜாவத்தை வீதியில் அமைந்திருக்கும் மதிப்பீட்டு இல. 116 ம், 118 ம் உடைய காணியின் ஒரு பகுதியான 0 ஏ., 0 றூட், 1.5 பேர். விஸ்தீரணமும், பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டதுமான காணித்துண்டு.

வடக்கு : 118 ம் இல. காணியின் மீதிப்பாகம், யாவத்தை வீதி ;
கிழக்கு : யாவத்தை வீதி ;
தெற்கு : 116 ம் இல. காணியின் மீதிப்பாகம், யாவத்தை வீதி ;
மேற்கு : 116 ம், 118 ம் இல. காணிகளின் மீதிப்பாகங்கள், யாவத்தை வீதி.
உரிமைகோருபவர் : நல்லாயன் தேவாலயம், திம்பிரிக்கஸ்யாய, வணக்கத்துக்குரிய சீ. எம். பீரிஸ் பங்கு குரு. திம்பிரிகஸ்யாய அரசினர் பாடசாலையும், கல்வித்திணைக்களம், கொழும்பு.

10-341/4

---

கட்டளை இல. 6.

**1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்**

**57 ம் பிரிவின் கீழ் கட்டளை**

1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 57 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர்ப்பாசன மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்க ஆகிய நான், கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இலங்கை மின்சாரச் சபைக்குத் தேவைப்படுவதால், உத்தேசிக்கப்பட்டுள்ள காணியை எடுத்தலை இந்தக்கட்டளையால் அங்கீகரிக்கிறேன்.

மை. சேனநாயக்கா,
நீர்ப்பாசன, மின்சக்தி,
பெருந்தெருக்கள் அமைச்சர்.

கு. இல. : பீ. ஈ. 13/70. எச். டீ/எல். எ./8.
கொழும்பு-1,
திகதி : 18.9.1970.

அட்டவணை

இலங்கைத்தீவின் மேற்கு மாகாணத்திலுள்ள கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் பாமனகடை மேற்கு வட்டாரத்திலுள்ள ஹம்டன் ஒழுங்கையில் அமைந்திருக்கும் மதிப்பீட்டு இல. 97 ஐ உடைய காணியின் ஒரு பகுதியான 0 ஏ., 0 று., 1.5 பேர். விஸ்தீரணமும், பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டதுமான காணித்துண்டு.

வடக்கு : அதே காணியின் ஒரு பகுதியான வீதியொன்று ;
கிழக்கு : அதே காணியின் மீதிப்பாகம் ;
தெற்கு : அதே காணியின் மீதிப்பாகம் ;
மேற்கு : ஹம்டன் ஒழுங்கை.
உரிமைகோருபவர் : திரு. ஆதர் பர்னாந்துவும் ஏனையோரும்.

10-341/5

---

**தாவர விலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின்கீழ் கப்பற் சேவை, உல்லாசப்பிரயாண அமைச்சரால் இடப்பட்ட கட்டளை.

பீ. பி. ஜீ. கலுகல்ல,
கப்பற் சேவை உல்லாசப்பிரயாண அமைச்சர்.

கொழும்பு, செப்தெம்பர் 19 ,1970.

கட்டளை

இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள நிலப்பிரதேசமானது, 1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்ட படியான (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அரணிடமொன்றாக இதனால் வெளிப்படுத்தப்படுகின்றது.

அட்டவணை

சேருவில்லை—அல்லை அரணிடம்

கீழ் மாகாணம் திரிகோணமலை மாவட்டத்திலுள்ள கொட்டியார் பற்றுவிலுள்ளதும் கிட்டத்தட்ட 60 சதுரமைல் விஸ்தீரணமுள்ள

தும் பின்வருமாறு எல்லைகளைக் கொண்டதுமான காணி அடக்கலும் :—

வடக்கு : பாலத் தோப்புச் சந்தியிலிருந்து கதிரவேலு—மூதூர் அரசாங்க வேலைப்பகுதி வீதி வழியாகக் கீறப்பட்ட ஒரு கோட்டின் வழியாக பாலத்தோப்பு—மூதூர் அரசாங்க வேலைப் பகுதி வீதி வழியாக வடகீழ் முகமாகச் சென்று தோப்புச் சந்தியைச் சந்திக்கும்வரையும், அங்கிருந்து கிழக்கு முகமாக சேருவிலைக்குச் செல்லும் கிராமச்சங்க வீதி வழியாக உப்பூறலுக்குச் செல்லும் வீதியைச் சந்திக்கும் வரைக்கும் ; அங்கிருந்து கிழக்கு முகமாகவும், வடகீழ் முகமாகவும், தென்கீழ் முகமாகவும் பின் கீழ்முகமாகவும் மேற்கூறிய வீதி வழியே சென்று கடலின் முகக்கரையை வந்தடையும் வரைக்கும்.

கிழக்கு : கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து கீறப்பட்ட கோட்டினால், தென்முகமாக, கடற்கரையோரமாக வெருகல் ஆற்றைச் சந்திக்கும் வரையும்.

தெற்கு : கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து கீறப்பட்ட கோட்டினால் பொதுவாக மேற்கு முகமாக வெருகல் ஆறு வழியாக வந்து கதிரவேலு—மூதூர் அரசாங்க வேலைப் பகுதி வீதியின் வெருகல் (Ferry) தோணித்துறையைச் சந்திக்கும் வரையும்.

மேற்கு : கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து கீறப்பட்ட கோட்டினால் வடமுகமாகவும் வடகீழ் முகமாகவும் கதிரவேலு—மூதூர் அரசாங்க வேலைப் பகுதி வீதி வழியாகச் சென்று இப்பரப்பின் வடஎல்லைத் தொடக்கப்புள்ளியை அடையும் வரையும்.

10-263

---

## இணக்கச் சபைகள் சட்டம்

1959 இன் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(7) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், காலி மாவட்டத்திலுள்ள கொட்டாவைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் எல்லா உறுப்பினர்களையும் இத்தால் பதவியிலிருந்து அகற்றுகின்றேன்.

ஆர். விக்கிரமநாயக்க,
நீதியமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 செத்தெம்பர் 30 ஆந் நாள்.

10-349/1

---

## இணக்கச் சபைகள் சட்டம்

1959 இன் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4(1) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், காலி மாவட்டத்திலுள்ள ரத்கம கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகிய தொடந்துவை, ரத்கம, கம் மெத்தேகொடையைச் சேர்ந்த டயனஸ் லியனகே அவர்களுக்குப் பதிலாக, பூஸ்ஸ, கெந்தல "பத்மவிலா" ஐச் சேர்ந்த சிரிமாதுர பவுலிஸ் த சில்வா அவர்களை மேற்குறிப்பிட்ட குழாத்தின் உறுப்பினராகப் பதவி வகிக்கும் காலத்துள் அதன் தலைவராகவிருக்க இத்தால் நியமிக்கின்றேன்.

ஆர் விக்கிரமநாயக்க,
நீதி அமைச்சரின் பாராளுமன்ற
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 செத்தெம்பர் 25 ஆந் நாள்.

10-349/2

## சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்

### (அத்தியாயம்—219)

### ஆசுபத்திரிச் செயற்குழு, அரசாங்கப் பெரியாசுப்பத்திரி, கண்டி

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை கண்டி அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுபத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

**பட்டியல்**

1. திரு. எம். பி. கரேலிஸ்.
2. திரு. ரி. எம். எவ். ஹேமன், சமாதான நீதவான்.
3. அத்தியட்ச இஞ்சினியர் (கட்டடங்கள்) மத்திய பெரும் பாகம்.

10-278

---

## சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்

### (அத்தியாயம்—219)

### ஆசுபத்திரிச் செயற்குழு, அரசாங்கப் பெரியாசுப்பத்திரி, இரத்தினபுரி

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம் வரை இரத்தினபுரி அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

**பட்டியல்**

1. திரு. பி. ஏ. சமரசிங்ஹ
2. மாவட்ட இஞ்சினியர் (கட்டடங்கள்), இரத்தினபுரி
3. திரு. நிஹால் வெத்தசிங்ஹ
4. திரு. கருணாரத்ன போதினாகொட
5. டாக்டர் பி. அரசரத்தினம்.

10-276

---

## சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்

### (அத்தியாயம்—219)

### ஆசுபத்திரிச் செயற்குழு, அரசாங்கப் பெரியாசுப்பத்திரி, அநுராதபுரம்

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை அநுராதபுரம் அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 23 செப்ரெம்பர் 1970.

**பட்டியல்**

(1) டாக்டர் எச். ஏ. டிறெக்ஸ் (தலைவர்)
(2) வைத்தியாச்சாரிய கே. எச். திஸநாயக்கா
(3) அத்தியட்ச இஞ்சினியர் (கட்டடங்கள்) வடமேற்குப் பெரும் பாகம்.
(4) திரு. நவரத்ன பி. எக்கநாயக்க, சமாதான நீதவான்
(5) திரு. பியதாச உப்புல்தெனிய
(6) திரு. ஜே. டபிள்யு. பெரேரா
(7) திரு. எச். எம். பெரேரா.

10-271

## சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்
### (அத்தியாயம்—219)
### ஆசுப்பத்திரிச் செயற்குழு, அரசாங்கப் பெரியாசுப்பத்திரி, குருநாகல்

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை குருநாகல் அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

பட்டியல்

1. திரு. டபிள்யு. எம். நந்திசேன (தலைவர்)
2. திரு. எம். கே. எம். கே. பாஷா
3. அத்தியட்ச இஞ்சினியர் (கட்டடங்கள்), கண்டி.

10-274

---

## சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்
### (அத்தியாயம்—219)
### ஆசுப்பத்திரிச் செயற்குழு, கொழும்பு வடக்கு அரசாங்கப் பெரியாசுப்பத்திரி

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை கொழும்பு வடக்கு அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

பட்டியல்

1. திரு. கே. டி. ஜே. சிறிவர்த்தன
2. அத்தியட்ச இஞ்சினியர் (கட்டடங்கள்) மேற்குப் பெரும் பாகம்.

10-273

---

## சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்
### (அத்தியாயம்—219)
### ...சுப்பததிரிச் செயற்குழு, அரசாங்கப் பெரியாசுப்பத்திரி, மட்டக்களப்பு

ஆ... ...ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 இத்துடன் உ... ...) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத் ஆம் அத்தியாயமான) ...திகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் தின் 11 ஆம் பிரிவின் நிய... ...டையும் காலம்வரை மட்டக்களப்பு மாதம் 31 ஆந் திகதி முடிவ... ...ன ஆசுப்பத்திரிச் செயற்குழு அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கா... ...ல் கௌரவ சௌக்கிய வின் அங்கத்தவர்களாக நியமிப்பத... அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. ...ஸ். வீரதுங்க,
நிரந்தரச் ...செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

பட்டியல்

1. அத்தியட்ச இஞ்சினியர் (கட்டடங்கள்) கிழக்குப் பெரும் பாகம்
2. திரு. பி. செல்லத்துரை
3. திரு. எம். ஏ. சீ. ஏ. ரஹுமான்.

10-272

---

## சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்
### (அத்தியாயம்—219)
### ஆசுப்பத்திரிச் செயற்குழு, அரசாங்கப் பெரியாசுப்பத்திரி, பதுளை

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை பதுளை அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர் 1970.

பட்டியல்

(1) திரு. டி. ஜே. செனரத்
(2) திரு. ஏ. எம். அப்துல்லா சாஹிப்
(3) அத்தியட்ச இஞ்சினியர் (கட்டடங்கள்) கிழக்குப் பெரும் பாகம்
(4) திரு. ஏ. ஆர். டி. வீரக்கோன்.

10-269

---

## சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்
### (அத்தியாயம்—219)
### சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம் மனநோய் ஆசுப்பத்திரி, அங்கொடை

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை அங்கொடை மனநோய் ஆசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க.
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

பட்டியல்

(1) அத்தியட்ச இஞ்சினியர் (கட்டடங்கள்) மேற்குப் பெரும் பாகம்
(2) திரு. கில்மன் டி சில்வா
(3) திரு. எம். எல். பெரேரா, சமாதான நீதவான்
(4) திரு. பி. ஜீ. விமலசிரி டீ சில்வா
(5) திரு. கே. ஏ. டி. கருணாரத்ன.

10-270.

---

## சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்
### (அத்தியாயம்—219)
### ஆசுப்பத்திரிச் செயற்குழு, மனநோய் ஆசுப்பத்திரி, பெலவத்தை

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை பெலவத்தை மனநோய் ஆசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

பட்டியல்

(1) திரு. எம். டி. டபிள்யு. குலரத்ன
(2) திரு. ...க. டி. பி. குணசிங்ஹ
(3) மாவட்ட... இஞ்சினியர், களுத்துறை, கட்டடங்கள் திணைக் களம்.

10-268.

சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்

(அத்தியாயம்—219)

ஆசுபத்திரிச் செயற்குழு, கொழும்பு ஆசுப்பத்திரிகள் குழு

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை கொழும்பு ஆசுப்பத்திரிகள் குழுவுக்கான ஆசுபத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சீ. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

பட்டியல்

1 திரு றெஜீ ரூபசிங்ஹ
2. திரு. கே. நாகலிங்கம், சமாதான நீதவான்
3. டாக்டர் ஆர். இரத்தினம், சமாதான நீதவான்
4. திரு. சி. பி. கமகே
5. திரு. ஜினதாஸ ரணதுங்க
6. திரு. எச். ஜி. அறவ்வாவல
7. திரு. கே. ஜயசேன
8. திரு. ஓ. எம். அந்திரயஸ்
9. திரு. ஆனந்த பெரேரா
10. திரு. பிரான்சிஸ் நாணயக்கார
11. திரு. விஜய தர்மவர்த்தன
12. டாக்டர் நாரத வர்ணசூரிய
13. திரு. லொயிட் வெத்தசிங்ஹ

10-266

சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம் (அத்தியாயம்-219)

ஆசுப்பத்திரிச் செயற்குழு, அரசாங்கப் பெரியாசுப்பத்திரி, காலி

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை காலி அரசாங்க பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சீ. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

பட்டியல்

1. அத்தியட்ச இஞ்சினியர் (கட்டங்கள்) தெற்குப் பெரும் பாகம்
2. திரு. வில்பிரட் சூரியாராச்சி, சமாதான நீதவான்.
3. திரு. எம். எஸ். எம். பிஷுர்டீன்.

10-277

சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்

(அத்தியாயம்—219)

ஆசுப்பத்திரிச் செயற்குழு, கொழும்பு தெற்கு அரசாங்கப் பெரியாசுப்பத்திரி

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை கொழும்பு தெற்கு அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சீ. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு 28 செப்ரெம்பர், 1970.

பட்டியல்

(1) திரு. ஆர். ஏ. வி. பெரேரா, சமாதான நீதவான்.
(2) திரு. எம். டி. ஆர். செனரத்ன.
(3) திரு. எல். எச். சிறிசேன டீ சில்வா.
(4) திரு. பேர்சி அபேகுணரத்ன.
(5) மாவட்ட இஞ்சினியர், கொழும்பு தெற்கு, கட்டடங்கள் திணைக்களம்.
(6) திரு. சரத் கோறலகே.

10-267

சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம்

(அத்தியாயம்—219)

ஆசுபத்திரிச் செயற்குழு, அரசாங்கப் பெரியாசுப்பத்திரி, யாழ்ப்பாணம்.

இத்துடன் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களை, (219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை யாழ்ப்பாணம் அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவர்களாக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சீ. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 28 செப்ரெம்பர், 1970.

பட்டியல்

1. திரு. எம். ஜீ. பஷீர்
2. திரு. கே. கைலாசபிள்ளை, சமாதான நீதவான்.
3. அத்தியட்ச இஞ்சினியர் (கட்டடங்கள்)
4. மாநகரசபை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.
5. திரு கே. சிவாநந்தன்.
6. திரு. எஸ். இராசையா
7. திரு. வி. யோகேஸ்வரன்
8. திரு. ரி. கந்தையா
9. திரு. எஸ். கந்தசாமி
10. திரு. எஸ். கனகலிங்கம் சிட்டு
11. திரு. எம். ஸி. றஉவ்
12. டாக்டர் எஸ். ஏ. அம்பலவாணர்.

10-264

சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவிற்கமைய, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பின்வரும் நியமனங்களை மகிழ்ச்சியுடன் செய்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை ஒழுங்குவிதிகளின் 26 ம் ஒழுங்குவிதியின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

(1) தேயிலை வளர்த்தலும் பதப்படுத்தலும் தொடர்பாய தொழிற் சம்பளச் சபையில் நியமன உறுப்பினரா யிருந்த திரு. வீர விமலரத்ன என்பவருக்குப்பதிலாக திரு. டபிள்யூ. எம். நந்திசேன.

(2) தேயிலை வளர்த்தலும் பதப்படுத்தலும் தொடர்பாய தொழிற் சம்பளச் சபையில் நியமன உறுப்பினர்களா யிருந்த திரு. ஜீ. பீ. பெரேரா, திரு. ஏ. றீ. எம். ஊயிஸ் ஆகியோருக்குப் பதிலாக திரு. கே. எம். எம். பி. கருணு ரத்தின, திரு. டி. டி. சூரியாராச்சி ஆகியோர்.

ஏ. ஈ. கோகர்ளி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ந் தேதி.

10-479

# அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

## அறிவித்தல்

**1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்த) செய்சட்டத்தினுல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளை சட்டம் (அதிகாரம் 453)**

கமநலச்சேவை ஆணையாளர் செனவிரட்ன பண்டா செனுயக்கா ஆகிய நான் 1968 ஆம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல் (திருத்த) 48 ஆம் இலக்கச் செய்சட்டத்தினுல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டம் அதிகாரம் 453 இன் (இலங்கைச் சட்ட வாக்கங்கள்) படி புத்தளம் அரசாங்க அதிபரால் 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்தம்) செய்சட்டத்தின் 17 ஆம் பிரிவினுல் திருத்தப்பட்ட படியான மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப் பட்டதும் கீழ்க்குறிக்கப்பட்டிருப்பதுமான திட்டம் என்னுல் அங்கீகரிக் கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

செ. ப. செனுயக்கா
கமநலச்சேவை ஆணையாளர்.

11.8.1970.

**சிறிய நீர்ப்பாய்ச்சல் வேலைகளைத் திருத்துவதற்கான திட்டம்**

1. வேலையின் பெயரும் விவரணமும். அந்தணன் கட்டுகுளம் I/6 (12.00 × 6.35)

2. இத்திட்டத்தின் கீழ் நீர்ப்பாய்ச்சக் கூடிய காணியின் தன்மையும் அளவும் :—

தனியாருக்குச் சொந்தமான காணி: அண்ணளவான ஏக்கர் அளவு : 37
முடிக்குரிய காணி : அண்ணளவான ஏக்கர் அளவு—

3. ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் :—

(1) கீழே தரப்பட்ட மிக முக்கியமான கட்டட வேலைகளை அதாவது

(அ) குளக்கட்டமைத்தல்

(ஆ) மூன்று திறவு றெகுளேட்டர்

(இ) இரு துருசுகளமைத்தல்.

மதிப்பிடப்பட்ட செலவாகிய ரூ. 30,000/- வரைக்கும் அரசாங்கத்தால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

(2) மேற்சொன்னவாறு அரசாங்கம் பொறுப்பேற்றமைக்குச் கைம் மாருக காணித்துண்டு பெற்றவரும் குடிநில உரிமையுள்ள விவசாயிகளும் அல்லது எக்காணியினும் காணி பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயிகளோ இல்லாதவிடத்து அக்காணிகளின் சொந்தக்காரர்கள், இக்கட்டட வேலைகள் முடிந்ததன் பின் எதுவித வேதனமுமின்றி இவற்றைப் பேணுவதற்கும் திருத்துவதற்குமான கூலியாளர்களைக் கொடுத்துதவ வேண்டும்.

(3) இத்திட்டத்தின் கீழ் தங்கள் பங்கைச் செலுத்துவதில் காணித்துண்டு பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயியோ, இவர்களில்லாத விடத்துக் காணியின் சொந்தக்காரரோ தவறுவாராயின் இப்படியான வேலையை வேறு ஒருவரைச் செய்ய அரசாங்க அதிபர் பணித்து இதனுல் ஏற்படும் செல விளை இக்கட்டளைச் சட்டத்தின் VII ஆம் பாகத்தில் குறிப் பிட்டுள்ளவாறு அறவிடலாம்.

10–262

---

## 1971 ம் வருடத்துக்கு துப்பாக்கி முதலியவைகளின் உத்தரவுப் பத்திரங்கள் புதுப்பித்தல்

துப்பாககி முதலியவைகளை வைத்திருப்போர் 1971 ம் ஆண்டுக்கான, உத்தரவுப் பத்திரங்களை 1970 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ந் திகதி வரையில் புதுப்பிக்கப்பட வேண்டும். 1970 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரமும், துப்பாக்கியையும் அதற்குரிய கட்டுப் பணத்தையும் சமர்ப்பித்தால் உத்தரவுப் பத்திரம் புதுப்பிக்கப் படும். 1970 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப்பத்திரம் இழந்தவிடத்து உத்தரவுப்பத்திரம் புதுப்பிக்கு முன் ரூபா. 1/- (ஒன்று) செலுத்தி உத்தரவுப்பத்திர இழப்புப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

1970 ம் ஆண்டு திசெம்பர் 31 ந் திகதிக்குப் பின்னர் 1971 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப்பத்திரம் இல்லாது வைத்திருப்பது ஒரு குற்றமாகும். 1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ந் திகதிக்குள் உத்தரவுப்பத்திரம் புதுப்பிக்கத் தவறுவாராயின் உத்தரவுப்பத் திரத்திற்குரிய தொகைக்கு சமமான தொகை சட்டத்துக்கு பங்கமில்லாமல் தண்டனையாக அறவிடப்படும்.

துப்பாக்கி வைத்திருப்போர் 1970 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரத்துக்குரிய பணத்தையும், 1970 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப்பத்திரத்தையும் அவர்களது பகுதி பிரிவுக்காரியாதிகாரிக்கு 1971 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ந் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

துப்பாக்கி உத்தரவுப் பத்திரம் புதுப்பிக்கும் காலமாகிய 1970 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு மார்த்து மாதம் 31 ந் திகதிகளில் களுத்துறைக் கச்சேரியில் துவக்கு உத்தரவுப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட மாட்டா.

எஸ். டி. சீ. சமரதுங்க,
களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபர்.

களுத்துறைக் கச்சேரி,
1970 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 20 ந் திகதி.

10-243

---

## துப்பாக்கி அனுமதிப்பத்திரங்கள் புதுப்பித்தல்—1971

1970 ம் ஆண்டு மார்கழி (டிசம்பர்) மாதம் முதலாம் திகதியிலிருந்து 1971 ம் வருட துப்பாக்கி அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படும். துப்பாக்கியின் சொந்தக்காரர்கள் தாங்கள் வசிக்கும் பிரிவுக் காரியாதிகாரிக்கு மனுச் செய்தல் வேண்டும். திருகோணமலை எல்லைக்குள் (நகரமும் சூழலும்) வசிக்கும் துப்பாக்கியுடையவர்கள் திருகோணமலை பிரிவுக் காரியாதிகாரிக்கு மனுச் செய்தல் வேண்டும். திருகோணமலை மாவட்டத்திலுள்ள காரியாதிகாரிகளின் விலாசம் பின்வருமாறு.

(1) பிரிவுக்காரியாதிகாரி, திருகோணமலை

(2) பிரிவுக் காரியாதிகாரி, மூதூர்.

(3) பிரிவுக் காரியாதிகாரி, கிண்ணியா.

(4) பிரிவுக் காரியாதிகாரி, கந்தளாய்.

(5) பிரிவுக் காரியாதிகாரி, கட்டுக்குளம்பத்து (கிழக்கு) குச்சவெளி.

(6) பிரிவுக் காரியாதிகாரி, கட்டுக்குளம் பத்து (மேற்கு) கோமரன்கடவல.

(7) பிரிவுக் காரியதிகாரி, சேருவில.

துப்பாக்கி அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அனுமதிப் பத்திரங்கள் காணுது போயிருந்தால் புதுப்பிக்கும் காலத்திற்கு முன் திருகோணமலை அரசாங்க அதிபரிடமிருந்து ஒரு ரூபாய் செலுத்தி சாத்திகைப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும். பழைய அனுமதிப் பத்திரங்கள் அல்லது காணமற் போனதற்குரிய சாத்திகைப் பத்திரங்கள் காண்பிக்கப்படாவிடில் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப் படமாட்டா. 1970 ம் வருட மார்கழி (டிசம்பர்) மாதம் 31 ம் திகதிகுமுன் தங்களுடைய அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காதவர்கள் அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்குச் சமமான அபராதத்திற்கு ஆளாவார்கள்.

1971 ம் வருட பங்குனி (மார்ச்) மாதம் 31 ம் திகதி வரை இந்த அபராதத்தை அறவிட்டுக்கொண்டு பிரிவுக்காரியாதிகாரிகளால் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பித்துக் கொடுக்கப்படும். அதன்பின் திருகோணமலைக் கச்சேரியில் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பித்துக் கொடுக்கப்படும். 1971 ம் வருட பங்குனி (மார்ச்) மாதம் 31 ம் திகதிக்குமுன் தங்கள் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்கத் தவறியவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

ஒரு துப்பாக்கி பாவிக்கமுடியாத நிலையிலிருந்தால் அத்துப்பாக்கியை 1970 வருட அனுமதிப்பத்திரத்துடன் நேர் முகமாகவில் அல்லது கிராம சேவகர் மூலம் கச்சேரியில் அல்லது பொலிசில் 1970 ம் வருட மார்கழி (டிசம்பர்) மாதம் 31 ந் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். (கையேற்றுக் கொள்பவரிடமிருந்து பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்) அல்லாத வகையில் அனுமதிப் பத்திரக்காரர் 1971 ம் ஆண்டிற்கான வழக்கமான கட்டுப்பணம் செலுத்தி அனுமதிப் பத்திரம் எடுக்க வேண்டும்.

டபிள்யூ. லயனல் பெர்னுண்டோ,
அரசாங்க அதிபர், திருகோணமலை.

திருகோணமலைக் கச்சேரி,
1970 ம் ஆண்டு செப்டெம்பர் 19 ம் திகதி.

10-37

---

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி
## புகையிரதக் கடவைத் திருத்த வேலைகள்

பிரதான புகையிரதப் பாதையில் அம்பேபுஸ்ஸ மீரிகம புகையிரத நிலையங்களுக்கிடையில் 31 மைல் 01 சங்கிலி தூரத்தில் வீற்றிருக்கும் புகையிரதக் கடவை 21.10.70 ம் திகதி புதன் கிழமை காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணிவரையும், 22.10.70 ம் திகதி வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையும் முற்றாக இல்லாது தடைசெய்யப்படும். அதோடு திருத்த வேலைகள் பாதிக்கப்படாதிருக்கும் பொருட்டு 21.10.70 ம் திகதி புதன்கிழமை இரவு 10.00 மணி முதல் 22.10.70 ம் திகதி வியாழக்கிழமை காலை 6.00 மணி வரை முற்றாகத் தடைசெய்யப்படும்.

இவ்வேளையில் நீர்கொழும்பு-மீரிகம வழியிலிருந்து வரும் பாரமில்லாத வாகனங்கள் வில்வத்த-முருகம்பொள வழியினூடாகவும் பாரமுள்ள பஸ் வண்டி லொறி போன்ற வாகனங்கள் திவுலுபிட்டியவிலிருந்து திருப்பப்பட்டு கிரிஉல்ல-மீரிகம வழியினூடாகத் திருப்பப்படும்.

ஜே. போல் சேனுரத்ன,
இலங்கை அரசாங்கப்
புகையிரத அதிபருக்காக.

10-361

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் .. | 2.10.70 | வெள்ளி .. | 25. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி .. | 2.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி .. | 9.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி .. | 16.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி .. | 23.10 70 | வெள்ளி .. | பி.ப. | 3 30 |
| நவெம்பர் .. | 5 11 70 | வியாழன் .. | 30 10 70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் .. | 5.11.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி .. | 12.11.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி .. | 20.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| திசெம்பர் .. | 4.12.70 | வெள்ளி .. | 27.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி .. | 4.12.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 18 12 70 | வெள்ளி .. | 10.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 24 12.70 | வியாழன் .. | 17 12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் .. | 24.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.